# மனித உரிமைகள் மற்றும் அதன் நடைமுறைச் சாத்தியம் பற்றிய சமுதாய மட்டத்திலான கருத்தாடல்கள்: யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை மையமாகக் கொண்ட ஒரு விடய ஆய்வு

**சு. ஜீவசுதன்**

**ஆய்வுச்சுருக்கம் :** *தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களில் விவாதிக்கப்பட்டது போன்று கடந்த மூன்று தசாப்தகாலங்களில் இனமுரண்பாடுகளின்போது இலங்கையில் வன்முறை மிகவும் ஆபத்தானதோர் நிலையிலிருந்துள்ளது. அதிலும் குறிப்பாக கடந்த ஏழு வருடங்கள் இன்னும் அதிகமான வன்முறை மற்றும் மனிதஉரிமை மீறல்களைக் கண்ணுற்ற காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இந்தச் சூழலில் இவ் ஆய்வானது நீதி மற்றும் மனித உரிமைகள் பற்றி மக்களின் நோக்குநிலை எவ்வாறு உள்ளது என்பது பற்றியும், உள்ளூர்ச் சூழலில் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதுஇ அவற்றை மேம்படுத்துவது தொடர்பிலும், அவர்களின் கருத்துநிலை எவ்வாறுள்ளது என்பது பற்றியும் ஆய்வு செய்வதுடனஇ மனித உரிமைகள் மட்டுப்படுத்தப்படும் சூழல் பற்றியும் ஆராய்கின்றது. இவ் ஆய்வானது இரண்டு மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆறு பிரதேசசெயலர் பிரிவுகளில் நோக்கம் கருதிய மாதிரியெடுப்பின்மூலம் தெரிவு செய்யப்பட்ட 30 பங்குபற்றுனர்களிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. பிரதான ஆய்வின் முடிவுகளானது நீதி நிலைநாட்டப்படுதல் என்பது எல்லாக் குழுக்களையும், வெவ்வேறு நிறுவனங்களின் கீழுள்ள தனிநபர்களையும் சமமாகவும், நீதியாகவும் கையாள்வதுடன் தொடர்புபட்டது என்பதுடன்இ பொறுப்புக்கூறல் என்பது மனித உரிமைகள் மற்றும் வன்முறை விடயத்தில் மிகவும் முக்கியமானது என்றும் வாதிடுகின்றது. மேலும் இவ்வாய்வானது தர்க்கரீதியான நோக்கில் குற்றம், குற்றமின்மை, பொறுப்புக்கூறல் போன்ற கருத்தாடல்களை மீள்பரிசீலனை செய்வதுடன், இவ் விடயதானம் தொடர்பாக ஏற்கனவே காணப்படுகின்ற புலமைத்துறைக்கு பங்களிப்புச் செய்வதாகவும், மனித உரிமைகள் துறையில் புதிய ஆய்வுகளிற்கான ஆரம்பத் திசைகாட்டலாகவும் அவ் ஆய்வு நடவழிக்கைகளை மேலும் மேம்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.*

**திறவுச்சொற்கள் :** மனிதஉரிமைகள், நடைமுறைச் சவால்கள், சமமானதும் நியாயமானதுமான கவனம் மற்றும் பொறுப்புக் கூறல்.

## ஆய்வின் பின்புலமும் அறிமுகமும்

நவீன இலங்கையின் கடந்து சென்ற மூன்று தசாப்தங்கள் பெருமளவிலான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. இந்த வன்முறைகளானவை உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டங்கள், பயங்கரவாதத்திற்கு எதிரான போர் மற்றும் அரசியல் - அரசாங்கச் செயல்நிலைகளின் மாற்றங்களால் ஏற்பட்ட விளைவுகளுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. தேசிய மற்றும் சர்வதேசிய ஊடகங்களில் குறிப்பிட்டது போன்று கடந்த 2009 இற்குப் பிற்பட்ட காலப்பகுதியென்பது திரட்சியான மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்ததற்குச் சாட்சியாகக் காணப்படுகின்றது (சர்வதேச நெருக்கடிக்குழு, 2010).

கடந்த மூன்று தசாப்தங்களிற்கும் மேலாக இடம்பெற்ற மனிதஉரிமை மீறல் பின்னணியைப் பார்க்கின்றபோது அவை பல்வகைத் தன்மையுடையனவாக (Diverse

in Nature) காணப்படுகின்றன. இவற்றுள் சித்திரவதை, மூன்றாந்தரத் தண்டனைகள், சட்டவிரோத மற்றும் நீண்டகாலத் தடுத்து வைப்புக்கள் (குற்றச் சாட்டுக்கள் மற்றும் நீதி விசாரணைகளற்ற) சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், அரசியற் படுகொலைகள், மனிதப்பயன்பாட்டிற்குரிய மையங்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடாத்துதல், ஆயுததாரிகளின் அச்சுறுத்தல்கள், காணாமற் போதல்கள் மற்றும் மறைவான சிறைவைப்புக்கள் என்பனவும் அடங்குகின்றன. இவை உயிர்வாழ்தலுக்கான உரிமை மற்றும் அடிப்படைச் சுதந்திரம் என்பவற்றை சவாலுக் குட்படுத்தும் செயற்பாடுகளாகவும் இருந்து வருகின்றன. மேற்கூறிய வன்முறைகளும், மனித உரிமை மீறல்களும் மூன்று தசாப்த காலமாக இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இன முரண்பாட்டின் உப விளைவுகளென ஆசியச் சட்டவள மையம் (2004) கருத்துரைத்துள்ளது.

இலங்கை 1949, 12, ஆவணிமாத ஜெனீவாச் சமவாயத்தின் பங்காளி நாடாக விளங்காத போதும் இங்குள்ள அரச தரப்பினர் மற்றும் போராட்டக் குழுக்கள் போன்றவை ஆயுத முரண்பாடுகள் தொடர்பான சர்வதேசச் சட்டங்களைக் கருத்தில் கொள்ளாது செயற்படுகின்றமையானது பல மனித உரிமைமீறல் செயற்பாடுகளிற்கு அடிப்படையாய் அமைந்துள்ளது எனலாம். அத்துடன் உள்ளூர் மோதல்களின்போது பாதிக்கப்படுபவர்களைப் பாதுகாத்தலுக்கான நெறிமுறைகளைப் பின்பற்றாமல் அரச மற்றும் அரசுசாரா (State & Non State) பிரிவினரால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளானவை இன்று மனித உரிமைச்செயற்பாட்டாளர்களின் கரிசனைக்குட்பட்டிருப்பதனைக் காணலாம்.

இது தவிரவும் இலங்கையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட தவறான அல்லது பாரபட்சமான கொள்கைகளுக்கும், அவற்றின் செயற்படுத்தலும் வன்முறைகளிற்கு தளமிடுவனவாக அமைந்துள்ளன. இவ்வாறான ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் நீதி நிலைநாட்டப்பட வேண்டுமெனப் பெரும் பிரயத்தனம் மேற்கொள்ளும் தறுவாயில் இன்றுள்ளனர். அத்துடன் இன்று வரையிலும் வன்முறைகள் மற்றும் மனிதஉரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய இழப்பீடு என்பது தனியே பணரீதியானதாக வழங்கப்படுவதோடு மட்டுப் படுத்தப்பட்டுள்ளதுடன் இது குறிப்பிட்ட ஓரளவே பாதிக்கப்பட்டவர்கள் தமது பிரச்சினைகளுடன் முகாமைத்துவம் செய்வதற்குரிய பொறிமுறையாக அமைந்துள்ளதனையும் காணலாம். உதாரணமாக உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களிற்கு பணரீதியான இழப்பீடு என்பது ஒரு தற்காலிகமான நிவாரணமாக அமைந்துள்ளதனைக் காணலாம். மேலும் அரச பிரிவினரே இவ்வாறான இழப்பீடுகளை வழங்குபவர்களாக உள்ளனர். எனினும் இவ்வாறான நடவடிக்கைகள் வன்முறைகளிலும், மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடுபவர்களை நீதிக்கு முன் நிறுத்துவதில் தோல்வி கண்டுள்ளதையே பெருமளவு சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீண்டு தமது குடும்ப மற்றும் சமுதாய நடிபங்குகளை ஆற்றுவதற்கு மிகப் பொருத்தமான பிரதியுபகாரப் பொறிமுறைகளே உதவமுடியும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்றாகும்.

நீதியை மீள்நிலைநாட்டுகின்ற செயற்பாடுகள் மற்றும் மீள்நல்லிணக்கம் தொடர்பாக மக்கள் தமது கருத்துக்களையும், சிந்தனைகளையும், அனுபவங்களையும் எவ்வாறு பிரதிபலிக்கின்றனர் என்பது பற்றியும்

ஆய்வு செய்ய வேண்டியது தற்காலச் சூழலில் மிகவும் முதன்மையானதொன்றாகக் காணப் படுகின்றது. மனிதஉரிமை மீறல்களிற்கான தலையீட்டுச் செயற்பாடுகளிற்குரிய சாத்தி யமான பொறிமுறைகள் மற்றும் உளவியல் தாக்கங்களிற்கானகுணமாக்கற்பொறிமுறைகள் பற்றியும், பாதிக்கப்பட்டவர்களின் நோக் குநிலைபற்றியும்அறிய இவ் ஆய்வு உதவிகரமா னதாக அமைகின்றது.

இலங்கையில் வன்முறைகள் பற்றிய ஒரு சுருக்கமான பார்வை

இலங்கை 1950ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு முகம் கொடுத்து வரும் ஒரு நாடாகக் காணப்படுகின்றது. கலவரங்கள், விடுதலைப் போராட்டச் செயற்பாடுகள் மற்றும் தீவிரவாத எதிர்ச் செயற்பாடுகளென இவை பல்வேறு வடிவங் கொண்டவையாகக் காணப் படுகின் றன. குறிப் பிட் டுக் கூற வேண்டுமெனில் பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தல், நீண்டகால /சட்டத்திற்கு முரணான தடுத்து வைப்புக்கள் மற்றும் சித்திரவதைகள் என்பவற்றைக்கூற முடியும். இக்குற்றச் செயல்கள் பெரும்பாலும் அரசசார்பு படைகளாலும், ஆயுதப் பிரிவினராலும் மேற்கொள்ளப்பட்டாலும், துணைப்படைகள் மற்றும் விடுதலை அமைப்புக்கள் என்பனவும் கப்பம் பெறுதல், உயிர் அச்சுறுத்தல் விடுத்தல், கொலைகள், பலவந்தமான ஆட்திரட்டல்கள் போன்றவற்றை பொதுமக்கள் மீது மேற் கொண்டுள்ளதோடு, இந்த அனுப வங்கள் பெரும் பாலும் துல்லியமாக ஆவணப் படுத்தப்பட்டிருப்பதனையும் காண லாம். எனினும் இந்தப் பகுதியானது கடந்த சில தசாப் தங் களாக ஆயுத முரண் பாடுகள் தொடர்பில் நிகழ்த்தப்பட்ட வன்முறைகள், மனித உரிமைகள் என்பவைபற்றிச்சுருக்கமாகப் பார்க்கிறது.

இலங்கையின் வடகிழக்கிலும் தெற்குப் பிராந்தியங்களிலும்ஏற்பட்ட ஆயுதமோதல்கள் மற்றும் வன்முறைகள் காரணமாக பெருமளவிலான மக்கள் கொல்லப்பட்டும், காணாமற் போயுமுள்ளனர். மேலும் பலர் தமது சொத்துக்கள், வாழ்வாதாரங்கள் என்பவற்றை இழந்தும் நிர்க்கதியாகியுள்ளனர். பல லட்சக்கணக்கானோர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகி நீண்டகாலம் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தமது தனித்துவங்களை இழந்து வாழ்ந்து வருவதனையும் அவதானிக்க முடியும். இவ்வாறான அகதி வாழ்வில் ஒருவர் தனது கௌரவத்தைப் பாதுகாப்பதும், சுதந்திரத்தைப் பிரயோகிப்பதும், அசைவியக்கத்தை மேற்கொள்வதும் சவாலுக்குட்படுத் தப்படுகின்றது.

போர் ஓய்ந்த சூழலில் நாளாந்த வாழ்வியலை நகர்த்திச் செல்வதென்பது சவால் மிகுந்ததும், சோர்வு மிக்கதாகவும் காணப் படுகின்றது. பிரிவினைவாதச் செயற்பாடுகள் மீண்டெழலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்ற பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் மீது மிகவும் இறுக்கமான கண்காணிப்புக்கள் இடம் பெறுவதுடன் இன்றும் வட-கிழக்கின் சில பகுதிகளுக்குப் பயணம் செய்வதில் பல நிர்ப்பந்தங்கள் அரசினால் விதிக்கப்படுவதனையும் காணலாம். ஆயுதப்படைகளின் கெடுபிடிகள் மற்றும் பொலிசாரின் சோதனை நடவடிக்கைகள் என்பன மக்களிடையே ஒருவிதமான அச்ச நிலைமையைத் தோற்றுவித்துள்ளதுடன், அவர்கள் தமது அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது, மருத் துவம் மற்றும் சமய ஆன்மீகச் செயற்பாடுகள் போன்ற அத்தியாவசிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதிலும் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் நிலை தோன்றியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் மக்களின்

பொருளாதார, கல்வி, சமூக மற்றும் உளநலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு பண்பாட்டுரீதியான சவால்களையும் தோற்றுவிக்கின்றது என மனிதஉரிமைகளுக்கான ஐக்கியநாடுகள் ஆணையம் (UNHCR, 2009) கூறுகின்றது. இவ்வாறான உரிமை மீறல்களுக்கு முகம் கொடுக்கும் பிள்ளைகள் விசேடத்துவமான சவால்களுக்கு ஆளாகவேண்டியுள்ளது. பிள்ளைகள் குடும்பங்களை விட்டுப் பிரிதல், குடும்பங்களால் கைவிடப்படல் போன்றவற்றோடு விளையாட்டு மற்றும் பாதுகாப்பான சூழலில் வசித்தல் போன்ற விடயங்களிலும் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

மனிதஉரிமைகளுக்கான ஐக்கியநாடுகள் ஆணையத்தின் உலகளாவிய அறிக்கையில் (Global Report, 2008) வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளின் காரணமாக பெருமளவு இளைஞர்கள் தொழில் வாய்ப்பற்றுக் காணப்படுவதுடனஇ பொழுதுபோக்கு, சமூகப் பகிர்வு, ஆளுமைவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலும் சவால்களை எதிர்கொள்ளுவதுடன், தொழில் வாண்மைக்கான திறன்களை விருத்தி செய்தல் போன்ற விடயங்களும் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருவான்புர (2006) ஏற்றுக்கொண்டதைப் போல "பெண்களைப் பொறுத்தவரையிலும் அவர்களுக்கு சமூகத்தில் பால்நிலைரீதியான குறித்தொதுக்கப்பட்ட சமூக அந்தஸ்துக் காரணமாக அவர்களின் மீது வன்முறைக் கலாச்சாரம் மற்றும் மனித உரிமை மீறல்கள் செயற்பாடுகள் ஏற்படுத்தும் தாக்கம் மிகுந்த அக்கறைக்குரியதாகின்றது". குடும்பத் தலைவர்கள் அல்லது பிரதான உழைப்பாளர்களை இழந்து நிற்கும் பெண்கள் வாழ்வாதாரத்தில் ஈடுபடுதல் மற்றும் பிள்ளைகளைப் பராமரித்தலுடன், முழுக்குடும்பக் கட்டமைப்பையும் பராமரித்துக் கட்டிக் காத்தல் என்கின்ற முப்பரிமாண நடிபங்குகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் காணப்படுகிறது. இவர்களுடைய இவ்வாறான பன்முக இயலுமைகள் அவர்கள் வாழும் சமுதாயங்களால் ஏற்றுக் கொள்ளப்படவோ அன்றி அவர்களுக்கு அச்சமுதாயங்கள் தமது ஆதரவை வழங்குவதற்கோ பெரும் பாலும் முன்வருவதில்லை என்பதும் அவர்களுடைய பாதிப்புறும் தன்மையை மேலும் வலுவாக்குகின்றது. அத்துடன் இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் தமது பொது வாழ்விலும் பல புதிய நடிபங்குகளை ஏற்றுக் கொள்ளவேண்டியுள்ளதுடன் இவை பெரும் பாலும் ஆண்களாலேயே வகுக்கப்பட்டு வந்த தாகவும் காணப்படுகின்றன.

இப்பெண்கள்தமது இயலுமைக்கும்மேலதிகமாக இவ்வாறான கூட்டுக் கடமைகளையும், சவால்மிக்க செயற்பாடுகளையும் ஆற்றினாலும் இவர்களுக்குரிய சமூக அங்கீகாரம் என்பது கிடைக்காமையினால் அது மென்மேலும் அவர்களிற்கு உளநெருக்கீட்டை ஏற்படுத்துகின்றது. மேலும் இளம் விதவைப் பராயம் என்பது வாழ்வின் யதார்த்தமாக மாறியிருப்பதுடன், இலங்கை போன்ற பாரம்பரியச் சமூகங்களில் அது பெரும் சமூக விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை (ருவான்புர, 2006).

பெருமளவான இளைஞர்களிற்கும், யுவதிகளிற்கும் சிறைவாழ்வு என்பது ஒரு பயம் கலந்த யதார்த்தமாக மாறியுள்ளதுடன், இவர்களில் பலர் நீண்டகாலமாகக் குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி தடுத்து வைத்திருக்கப்படுவதுடன், சில வேளைகளில் நீண்டகாலமாக தமது குடும்ப உறவினர்களுடன் தொடர்புகளற்ற நிலையிலும் வாழ்ந்து கொண்டிருப்பதனையும் காணலாம். இவர்களைச் சந்திக்கவரும் குடும்ப உறுப்பினர்கள்கூட உயிர்

அச்சுறுத்தலுக்குள்ளாவதுடன், அவமானப் படுத்தப்படுதல் அல்லது தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படாமல் திருப்பியனுப்பப்படுதல் என்கின்ற நிலையும் காணப்படுகின்றது. சிறை வைக்கப்பட்டிருப்பவர்களும் சித்திரவதைகள், மரியாதைக் குறைவான நடவடிக்கைகள் மற்றும் உயிரிழப்புக்கள் எனப் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1982ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் சிறைக்கைதி ஒருவர் விசாரணைகளெதுவுமின்றி 18 மாதங்கள் தடுத்து வைக்கப்படக்கூடியதாகவும், இதற்குப் பின்னராகவும் இத்தடுப்பு நீடிக்கக்கூடிய வகையிலும் காணப்படுவதோடு அவர்களை விடுவிப்பது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. நீதிக்குப் புறம்பான கொலைகள், படுகொலைகள் என்பன இலங்கையின் ஆயுத முரண்பாடுகளின் ஒரு அம்சமாக இருப்பதுடன் பல்வேறுபட்ட ஆயுதப் படைப்பிரிவுகள் மற்றும் ஆயுதத் துணைக்குழுக்களின் இருப்பும் குற்றங்களைப் புரிந்தவர்களை இனம் காணுவதனையும், தண்டிப்பதனையும் மேலும் சிக்கலானதாக்குகின்றது. மேலும் கொலைகள் நடந்த சூழ்நிலைகளை வைத்துக் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியுமானதாக இருப்பினும், அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுத்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் அல்லது குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் கொண்டு வருவது மிகக் குறைந்த சாத்தியப்பாடான விடயமாக காணப்படுவதாகவும் பிரித்தானியாவிற்கான எல்லை முகவரகம் (2011) கூறுகின்றது.

சமூகத்தின் கீழ்நிலையிலுள்ளவர்களும், வறிய மக்களும் விசாரணைகளுக்காக காவல் நிலையங்களுக்குக் கொண்டு வரப்படும்போது சித்திரவதை மற்றும் மரியாதைக் குறைவாக நடத்தப்படுவதுடன், சிறு குற்றங்களுக்காகக் கைது செய்யப்படுவர்களும் இவ்வாறான சிக்கல் களுக்கு முகம்கொடுக்கவேண்டி வருவதாகவும் கூறப்படுகின்றது. ஐநாவின் சித்திரவதைக்கான விசேட பார்வையாளர் இலங்கைக்கு 2008ல் விஜயம் செய்து சித்திரவதைகளைத் தடுத்தல், சித்திரவதைகளில் ஈடுபடுவோரைத் தண்டித்தல் போன்றவற்றுக்கான சட்டமுறை மற்றும் நீதிச் செயற்பாடுகளைக் கண்காணித்து வெளியிட்ட அறிக்கையில் இராணுவ முகாம், காவல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் சித்திரவதை மற்றும் அவமரியாதைக்குட்படுவது தாராளமாக இடம்பெறுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார் (UNHCR, 2008).

இதுபற்றி 2005இல் தனது அனுபவத் திணைப்படையிலும், குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் 25 வருடங்களிற்கும் மேற்பட்ட பணி அனுபவத்தினைக் கொண்ட அதிகாரிகளின் கருத்தின் அடிப்படையிலும் பத்திரிகை ஒன்றிற்குக் கருத்துத் தெரிவித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் "விசாரணையின் தோல்விகளால் ஏற்படும் அவமானத்தை உரியமுறையில் கையாளத்தெரியாமையும், அரசியல்ரீதியான மற்றும் உயரதிகாரிகளின் அழுத்தமுமே இவ்வாறான சித்திரவதைகளிற்குக் காரணமாக இருப்பதுடன், சிலவேளைகளில் ஒரு குறிப்பிட்ட சம்பவத்திற்குப் பல கண்கண்ட சாட்சிகள் இருக்கும்போதும் கூட, நேரம் மற்றும் வளப்பற்றாக்குறை காரணமாக உரியமுறையில் விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது" எனத் தெரிவித்துள்ளார். மேலும் அனேகமான காவல்துறை அலுவலர்கள் சமூகத்தில் உயரிய அந்தஸ்துக் கொண்டவர்களை தாம் ஒருபோதும் சித்தி ரவதைக்கு உட்படுத்துவதில்லை எனவும், வலிமை குன்றிய சமூக வகுப்பினரே இவ்வாறு நடத்தப்படுவதாகவும் ஏற்றுக் கொண்டு ள்ளனர். மேலும்விசாரணைபற்றிய போதுமான திறன்கள் இன்மை மற்றும் ஒருவரை நீதிபதி முன்னிலையில் பாரப்படுத்துவதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய சட்டச்

செயற்பாடுகள் உரியமுறையில் பின்பற்றப் படாமையுமே இவ்வாறான சித்திவதைகளிற்குக் காரணமெனவும் கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டிருந்தன (தங்கவேல், 2005).

உயர்நீதிமன்றம் இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான முனைப்பைக் காட்டி வந்தாலும்கூட அதிகளவிலான இறப்புக்கள் மற்றும் காணாமற் போதல்கள் நிகழ்ந்ததன் காரணமாக இவ்வாறான நடவடிக்கைகள் சாத்தியமற்றுப் போனதையும் காணக்கூடியதாக உள்ளது. அரசாங்கத்தின் ஆதரவோடு நடைபெற்ற வன்முறைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்காக காணாமற் போனோருக்கான விசாரணைக்குழு போன்ற வெவ்வேறு வகையான வழிமுறைகள் கைக்கொள்ளப்பட்டது. இவ்வாறான ஆணைக்குழுக்கள் இவ்வன்முறைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும், குற்றமிழைத்தவர்களின் மீது சட்டநடவடிக்கையினை எடுப்பதற்குமான பரிந்துரைகளை மேற்கொண்டபோதும், வழங்கப்பட்ட நட்டஈட்டுத்தொகை மிகவும் குறைவானதாகவும், குற்றமிழைத்தவர்கள் நீதிக்குமுன் நிறுத்தப்படாமையினாலும் இவ் ஆணைக்குழுக்களின் நியமனம் பற்றி மக்களிடம் போதிய நம்பிக்கை காணப் படாமல் இருந்ததுடன், இக்குழுக்கள் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். இவ்வாறான அறிக்கைகள் பெரும்பாலும் மக்களின் பார்வைக்குக் கிடைக்கப் பெறாமையும் ஒரு விமர்சனமாக முன்வைக்கப்பட்டது. விசேடமான நீதி முறைகள் அல்லது சாதாரண முறைகள் எவ்வாறாக இருப்பினும் இவற்றினூடாக வழங்கப்பட்ட நீதி மிகவும் தாமதமாகவே கிடைத்ததாகவும் மக்கள் விசனமடைந்தனர்.

மனித உரிமை கண்காணிப்பகத்தினால் (Human Rights Watch) 2007 இல் இலங்கை அரசாங்கம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், மனித உரிமை மீறல்கள், அவற்றுக்கான சட்ட நடவடிக்கைகள் மற்றும் நட்டஈடு வழங்குதல் என்பன தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புடமை பற்றிக் கருத்துரைக்கும்போது அரசாங்கம் நேரடியாகவன்றி மறைமுகமாக இவ்வாறான குற்றச் செயல்களுக்கு ஆதரவு வழங்குவதை கண்டித்துள்ளதோடு, இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டோரைத் தண்டிப்பதில் காட்டும் அசமந்தப்போக்குப் பற்றியும் தனது கரிசனையைத் தெரிவித்திருந்தது. இலங்கை அரசாங்கமானது சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்காகச் செலவிடும் பணத்தின் பெரும்பகுதியை பாதுகாப்புச் செலவினங் களுக்காக ஒதுக்குவதனையும் பல சர்வதே மற்றும் உள்ளூர் நிறுவனங்களும் மனித உரிமை ஆர்வலர்களும் கண்டித்து வருவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.

மிகவும் ஆர்வத்துக்குரிய விடயம் ஒன்றையும் இங்கு நாம் அவதானிக்க வேண்டியுள்ளது. அதாவது இனமுரண்பாடு தொடர்பாகப் பயன்பாட்டிலுள்ள சொற்பதங்கள் மீதும் மக்கள் நம்பிக்கையிழந்திருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது சமாதானம், யுத்தநிறுத்தம், பிரிக்கப்படாத நாடு, தேசிய இறையாண்மை, அரசியல் தீர்வு, பேசித் தீர்க்கப்படும் பிரச்சனைகள், விடுதலை மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற பதங்கள் சாதாரண பயன்பாட்டுக்கு அப்பாலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதுடன், இவை இனக்குழுக்களிற்கிடையே பிரிவினையை ஏற்படுத்தும் ஆயுதங்களாகவும், மக்களிடையே உணர்ச்சி மிகுதியைக் கிளறி விடுவதற்காகவும் பயன்படுத்தப்படுவதோடு மக்களைத் தேசபக்தர் மற்றும் காட்டிக் கொடுப்போர் என்கின்ற இரண்டு வெவ்வேறு முகாம்களிற்குள் வகைப்படுத்தவும் பயன்படுத்தப்படும் ஆபத்தான கருவிகளாகவும் மாறியுள்ளன. மேலும் இவ் வன்முறைகளின் இன்னொரு பரிமாணமாக ஊடகங்கள், சிவில்

அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின்மீது அவதூறு பரப்பும் செயற்பாடுகள் ஆயுதக் குழுக்களாலும், அரச படையினராலும், அரசியல் வாதிகளாலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் காணலாம் (Press Emblem Campain [PEC], 2007).

கடந்த 2015 ற்கு முன்னர் இலங்கையானது உலகிலேயே ஊடகவியலாளருக்கான ஆபத்தான நாடுகளின் பட்டியலில் மூன்றாவதாக இனங்காணப்பட்டதுடன், ஊடகவியலாளர்களைக் கொல்லுதல், கடத்துதல் மற்றும் தாக்குதல் எனப் பல்வேறு சம்பவங்களும் அதிகரித்துக் காணப்பட்ட காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. மேலும் ஊடக நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களின் மீதான அச்சுறுத்தல் என்பது மிகச் சரியான தகவல்களினைப் பெற்றுக்கொள்ளும் மக்களின் உரிமையைப் பாதிப்பதாக அமைந்துள்ளதென (PEC 2007) அமைப்புக் கூறியுள்ளது. வெவ்வேறு கடும்போக்குக் குழுக்கள் மற்றும் ஆயுதக் குழுக்களின் தோற்றம் என்பது அரசாங்கம் புரிகின்ற மனித உரிமை மீறல்களுக்கான தெளிவான ஆதாரங்களாக இருந்தபோதிலும் இவ்வாறான செயற்பாடுகளுக்குரிய பொறுப்பை இக் குழுக்கள்மீது சுமத்தி விடுகின்ற போக்கையும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான வன்முறைக் கலாசாரம் இலங்கையில் சிவில் உரிமைச்சமூகங்கள், உள்ளூர்சார் மனித உரிமைச் சமூகங்கள் மற்றும் எல்லை கடந்த சர்வதேச மனித உரிமைச் செயற்பாடுகளென ஒருவிதமான எதிர்ப்பண்பாட்டையும் எம்மிடையே தோற்றுவித்துள்ளதையும் மறுக்கமுடியாது (Refugees Review Tribunal, 2010).

### ஆய்வு வினாக்கள்

பின்வரும் வினாக்களிற்கு விடை தருவதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. அவையாவன:

(1) மனித உரிமை மீறல்கள், அவை தொடர்பான வருந்துதல்கள் என்பவற்றுக்கான பொறுப்புடமை, நீதி, குற்றம் என்பவை தொடர்பாக சாதாரண மக்களினதும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களினதும் நோக்கு நிலை என்ன?

(2) பொதுமக்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் மனித உரிமை மீறல்களை எவ்வாறு நோக்குகிறார்கள், எவ்வாறு விபரிக்கின்றனர்?

(3) பொதுமக்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மனித உரிமை மீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் மனித உரிமை விழுமியங்களைப் பாதுகாத்தல் என்பவற்றை எவ்வாறான விடயங்கள் மேம்படுத்தும் என நம்புகின்றனர்?

(4) இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சாத்தியமான பங்களிப்பை வழங்கக்கூடிய பங்காளர்கள் பற்றிய பங்குபற்றுனர்களின் கருத்து யாது?.

### முறையியல்

#### ஆய்வுப் பிரதேசம்

சர்வதேச நெருக்கடிக்குழுவின் (2014) கருத்துப்படி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி என்பன இராணுவப் பிரசன்னம் நிறைந்த மாவட்டங்களாகவும் காணப்படுவதுடன் இவை முறையே 15 மற்றும் 4 பிரதேச செயலர் பிரிவுகளை நிர்வாக அலகுகளாகக் கொண்டு அரசாங்க அதிபர்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன (யாழ் மற்றும் கிளிநொச்சி அரசாங்க செயலகம், 2013). மனித உரிமை மீறல்கள் பெரிதும் இடம்பெறுகின்ற இரண்டு மாவட்டங்கள் என்றவகையில் இவை ஆய்வுப்பிரதேசங்களாகத் தெரிவு செய்யப்பட்டன. இங்கு உரிமை மீறல்கள் இப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றவையாகவும், வெளிப்படையானவையாகவும் காணப்படும் போது

வேறு சில சந்தர்ப்பங்களில் உரிமை மீறல்கள் மிகவும் மறைமுகமாகவும், கட்டமைக்கப்பட்டவையாகவும்காணப்படுகின்றன.

இதனடிப்படையில் இரண்டு மாவட்டங்களிலிருந்தும் தலா மூன்று பிரதேச செயலர் பிரிகள் வீதம் ஆறு பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன. இப்பிரதேச செயலர் பிரிவுகள் இன்றைய இலங்கையின் மனித உரிமைகள் மீறல் சம்பவங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளதோடு இடப்பெயர்வுகள், இலக்குவைக்கப்பட்ட கொலைகள், கடத்தல்கள், கப்பம் பெறல், கொலை மிரட்டல்கள், சட்டபூர்வமற்ற மற்றும் நீதிக்குப் புறம்பான தடுத்து வைப்புக்கள், சித்திரவதைகள் மற்றும் படுகொலைகள் என்பன அதிகம் இடம்பெற்ற இடங்களாகவும் காணப்படுகின்றன. பிரதேச செயலர்களும், அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஏனைய ஊழியர்களும் தகவல் திரட்டுவதற்கு ஒத்துழைப்பதற்காகத் தமது பூரண சம்மதத்தைத் தந்தமையினால் இவ் ஏழு பிரதேச செயலர் பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டன.

**ஆய்வுக்கான மாதிரி**

இவ்ஆய்வுக்கான மாதிரியானது மிகவும் சிறியதாக இருக்கக்கூடிய வகையில் 35 என ஆய்வாளரால் தீர்மானிக்கப்பட்டது. எதுவித வற்புறுத்துலுமின்றி தகவல் தரக்கூடியவர்கள் முதல்நிலைத் தகவல் தருனர்களூடாக இனம்காணப்பட்டு ஆய்வுக்குட் படுத்தப்பட்டுள்ளனர். மேலும் இவ் ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்ட தகவல் சேகரிப்பு முறையும் ஆழமானஇ திறந்த நேர்காணல் முறையாகக்காணப்பட்டமையாலும், ஆய்வுப் பரப்புத் தொடர்பாக பங்குபற்றுனர்களின் நோக்குநிலையும் அதனை அவர்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர் என்பதனை ஆராய்வதும் ஆய்வின் முதன்மையான நோக்கமாகக் காணப்பட்டமையாலும், ஆய்வில் பங்குபற்றுவதனால் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனப்பலர் அஞ்சியதாலும் ஆய்வுக்கான மாதிரியானது மிகவும் சிறியதாக இருக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டது. எனவே கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 20 பங்குபற்றுனர்களும், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 15 பங்குபற்றுனர்களுமாக 35 பங்குபற்றுனர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

வசதி கருதிய மாதிரியெடுப்பு முறையைப்பயன்படுத்தி ஆய்வுக்கெனத் தகவல் திரட்டுவதற்கு பங்குபற்றுனர்களை நேர்காணலுக்குட்படுத்துவது எனத்தீர்மானிக்கப்பட்டது. இதற்குரிய மாதிரிப்பகிர்வு பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டது.

| கிளிநொச்சி மாவட்டம் | பிரதேசசெயலர் பிரிவு | பாதிக்கப்பட்ட பொதுமக்கள் | முதல்நிலைத் தகவல் தருனர்கள் |
|---|---|---|---|
| | கரைச்சி | 05 | 01 |
| | கண்டாவளை | 05 | 01 |
| | பூநகரி | 05 | 01 |
| | பச்சிலைப்பள்ளி | 05 | – |
| யாழ்ப்பாண மாவட்டம் | பிரதேசசெயலர் பிரிவு | பாதிக்கப்பட்ட பொதுமக்கள் | முதல்நிலைத் தகவல் தருனர்கள் |
| | நல்லூர் | 05 | 01 |
| | வேலணை | 05 | 01 |
| | யாழ்ப்பாணம் | 05 | 02 |
| மொத்தம் | 42 | 35 | 07 |

பங்குபற்றுனர்களுக்கான தகுதிப்பாடு பின்வருமடிப்படையில் பங்குபற்றுனர்களின் தகுதிப்பாடு தீர்மானிக்கப்பட்டது.

1.சாதாரண பங்குபற்றுனர்கள்

அ.சாதாரண பங்குபற்றுனர்கள் ஏதோ ஒரு வகையில் மனிதஉரிமை மீறல்ஃவன்முறைக்கு முகம் கொடுத்தவர்களாகவும்

ஆ.மேற்கூறப்பட்ட ஏதோ ஒரு பிரதேசத்தில் வசிப்பவராகவும்

இ.பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட வராகவும்,

ஈ. எதுவித வற்புறுத்துலுமின்றி தகவல் தரக்கூடியவராகவுமிருத்தல் வேண்டும்.

2. முதல்நிலைத் தகவல்தருனர்

அ.மனித உரிமைகள் செயற்பாட்டுக்கு ஏதோவொரு வகையில் பங்களிப்புச் செய்பவராகவும்

ஆ.எதுவிதமான அரசியல் சார்பற்ற வராகவும்

இ.ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களேனும் மனித உரிமைகள் செயற்பாடுகளில் ஈடுபடுபவராகவும்

ஈ.எதுவித வற்புறுத்துலுமின்றி தகவல் தரக்கூடியவராகவுமிருத்தல் வேண்டும்.

இரண்டு ஆய்வுப்பிரதேசங்களிலிருந்தும் பெண்கள் நான்கு ஆண்களுட்பட 07 முதல்நிலைத் தகவல்தருனர்களும், சாதாரண பங்குபற்றுனர்களாக இருபாலாரிலிருந்தும் 35 பேர் உள்ளடங்கலாக மொத்தம் 42 பற்குபற்றுனர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தகவல்திரட்டலுக்கான கருவியும்பூர்வாங்க ஆய்வும்

இவ்வாறான ஆய்வுகளில் மிகவும் ஆழமான தகவல்களைத் திரட்டுவதற்கு பொருத்தமானதாக இருக்கும் என்ற ஆய்வாள னின் நம்பிக்கையின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் ஆழமான, திறந்த நேர்காணல் கருவியொன்று (an in-depth & open interview schedule) வடிவமைக்கப்பட்டது. இவ் நேர்காணல் உபகரணங்களின் மூலம் பங்குபற்றுனர்களின் நோக்குநிலை கருத்து மற்றும் புரிதல்கள் என்பவற்றை தடையின்றி ஆழமாக வெளிக்கொணர முடிந்தது. இந்தவகையில் முதற்றரத் தகவல்தருனர்கள் மற்றும் சாதாரண பங்குபற்றுனர்களுக்காக முறையே

1. நேர்காணல் வழிகாட்டி ஒன்றும் (Interview guide line)

2. ஆழமான நேர்காணல் பட்டியல் ஒன்றும் (In-depth interview schedule)

இவ்விரண்டு உபகரணங்களின் பயனுறுதித் தன்மையை நிச்சயிக்கும் பொருட்டு உண்மையான ஆய்வு இடம்பெற்ற இடத்திற்கு வெளியே யாழ்மாவட்டத்தின் நிர்வாகப்பிரிவின் கீழ்வருகின்ற கோப்பாய் பிரதேசசெயலர்பிரிவில்தெரிந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட அனுபவங்களைக் கொண்ட ஐந்து சாதாரண பங்குபற்றுனர்களுடனும், ஒரு முதல்நிலைத்தகவல்தருனருடனும்நேர்காணல் இடம்பெற்று தேவையான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு நேர்காணல்உபகரணங்களின் செயற்றிறன் உறுதிப்படுத்தப்பட்டது.

தரவுப்பகுப்பாய்வு

எல்லா ஆழமான நேர்காணல்களும் பண்புரீதியான பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டதுடன் இங்கு கருக்க விபரிப்பு பகுப்பாய்வு முறைமை முதன் மைப்படுத்தப்பட்டது. அடையாளம் காணப்பட்ட கருக்கள் மற்றும் பிரதானமான எண்ணங்கள் வகைப்படுத்தப்பட்டன. மேலும் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற மனித உரிமை விழிப்புணர்வுச் செயற்பாடுகள், எடுத்துரைத்தல்கள் என்பனவற்றினை அடியாகக் கொண்டும் தகவல்கள் வகைப் படுத்தப்பட்டன.

அடையாளம் காணப்பட பிரதான கருப் பொருள் வகைப்பாடுகள்

நீதி, உரிமைகள் மற்றும் மீறல்கள் என்றால் என்ன?

அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

நீதியை எண்ணக்கருவாக்கம் செய்தல்

நீதி எனும் விடயம்தொடர்பாக அவர்களின் நோக்குநிலையைப் பகிரும்போது எல்லோரையும் நீதியாகக் கையாளுதல் மற்றும் வளங்களின் சமமான கிடைப்பனவு என்பதனையே முதன்மைப்படுத்தினர். வேறு சிலர் நீதியென்பது எல்லோருடைய நலத்திற்குமான அடிப்படை அல்லது ஒழுங்கமைவான பண்பட்ட வாழ்க்கைக்கான அடித்தளம் என்பதாகவும், நீதி என்பது பிழைகளைத் திருத்துதல் என்ற கருத்துடன் மட்டுப்படுத்தப்படாமல் மரியாதை செலுத்துதல், ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் நீதிமன்றங்களில் பாதுகாப்பான விசாரணைகள் என முற்றிலும் பரந்துபட்டதாக இருந்தது.

நிறுவனரீதியான பொறிமுறையினுள் சமத்துவமான மற்றும் நீதியான அணுகு முறைக்கான செயற்படிமுறைகளும் அவற்றிற்கான வெளிவருதிகளும்

நீதி, அநீதி என்பன ஒழுங்கமைப்புக்களைக் குறித்துப் பேசப்பட்டது. பெரும்பாலானோர் சமத்துவம்இன்றிநீதியைநிலைநாட்டமுடியாது என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். சிறப்புற இயங்கும் நாடொன்றில் வாழ்பவர்களுக்கு சமத்துவம் வழங்கப்படுவதுபோன்று குடும்பம் மற்றும் பணியிடங்களிலும் இத்தன்மை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் பலரால் முன்வைக்கப்பட்டது. மக்கள் சரிசமமாக நடத்தப்படுவதுடன்இ அவர்களது சமூகநிலைமை மதிக்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் பங்குபற்றுனர் கொண்டிருந்தனர். மனித உரிமைகள், நீதி என்பன சமத்துவத்தினால் விளைவது என்றும், ஒரு சமத்துவமான சமூகம் அசமத்துவத்தைச் சமப்படுத்தும் என்றும் கருதுகின்றனர்.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் நீதி என்றால் என்ன என்பதைக் கருத்தியல் ரீதியாகவும், சாதாரணமக்களின் நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறுள்ளது எனவும் பாகுபடுத்திக் காட்டுகின்றனர். ஒரு செயற்பாட்டாளர் "எனக்கு இலட்சிய பூர்வமான அல்லது கருத்தியல்ரீதியிலான நீதி தொடர்பாக எந்தவிதமான மாயை களும் இல்லை. பெண்கள் மற்றும் சிறுபான்மையினருடன் பணிபுரிகின்றபோது இங்கு ஒருவிதமான சம்பிரதாயபூர்வமான சமத்துவம் இருப்பதனைக் காண முடிகிறது. உதாரணமாக இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிகள் தொடர்பான மொழிச்சட்டத்தைப் பார்க்கின்றபோது இம்மூன்று மொழிகளும் சரிசமமாக இருப்பது போலவே தோன்றும். எனினும் உண்மை அவ்வாறானதல்ல. எமக்குத் தெரியும் இது தொடர்பான சம்பிரதாயபூர்வமான அர்ப்பணிப்பு என்பதுடன் நிதானம் என்கின்ற விடயமும் காணப்படுகின்றது. மேலும் நீதியின் முதன்மையான ஃ முக்கியமான பகுதியையே நாம் எப்போதும் தேடவும், அடைந்து கொள்ளவும் விரும்புகின்றோம்" என்கிறார்.

பிரதான தகவல் தருபவர்கள் நீதி பற்றி அதிகம் கருத்துரைத்தாலும், பெரும்பாக மட்டத்தில் உதாரணமாக தேசியரீதியில் நீதியை எதிர்பார்ப்பது என்பது தொடர்பாக எதிர்மறையான சிந்தனையையே கொண்டுள்ளனர். நாட்டின் எல்லா இனக்குழுக்களும் தமது சொந்த இனக்குழுவுக்கோ அல்லது வேறு இனக்கு ழுவுக்கோ ஏதோ ஒரு காலகட்டத்தில், ஏதோ ஒரு வகையில் அநீதி இழைத்துள்ளனர் என்ற கருத்தும் இங்கு முதன்மை பெற்றது. இவ்வாறான கருத்தை வெளியிட்டவர்கள் இனங்களிற்கிடையேயான அநீதிகள் தொடர்பில் சிறந்த வெளிவருதிகள்

கிடைப்பது தொடர்பாக எதிர்மறையான எண்ணங்களையே கொண்டுள்ளனர்.

பிரதானமான நடுநிலையாளராக சட்ட முறைமை அமைதல்

பதிலளித்த பிரதான தகவல் தருனர்களில் பெரும்பான்மையானோர் நீதியை அனுபவிக்கச் சிறந்ததொரு சட்டமுறைமை முதன்மையானதாகும் என்கின்றனர். குறிப்பாக "சட்டவரைமுறைகளிற்குள் பிரசைகளின் உரிமைகளை முதன்மைப்படுத்தல்" எனும் விடயத்திற்கு பதிலளிப்பவர்கள் அழுத்தம் கொடுத்திருந்தமையே சட்டம் தொடர்பான அவர்களின் நேரான பார்வைக்கு அடிப்படையாக அமைந்திருந்தது. 1988 – 1989 காலப்பகுதிகளில் இருந்ததுபோல நீதித்துறை ஒரு உயரிய நிலைக்குச் செல்ல வேண்டுமென்றும் கருதினர். மேலும் இக்காலப்பகுதியில் நீதித்துறையாளர்களிற்கு அச்சுறுத்தல் விடப்பட்டிருப்பினும் அவர்கள் அடிபணியாது சிறப்புறச் சேவையாற்றி நீதியை நிலைநாட்ட முயற்சிசெய்திருந்தனர். இன்றும் கூட உயர்நீதிமன்றத்தின் நீதிச் செயற்பாடுகள் மற்றும் நேர்மைத்தன்மை தொடர்பாக மக்களிடம் புரிந்துணர்வான சிந்தனைகள் காணப்படுவதோடு இவ் நல்லெண்ணம் சமூகத்தின் ஏனைய துறைகளையும் செழுமைப் படுத்தும் என்பதில் ஐயமில்லை எனத் தெரிவித்தனர்.

இவ்வாறான சிந்தனைகள் மக்களிடையே மெதுவாகவே தோன்றினாலுமஇ நீதிமன்றங்கள் மக்களுக்கும் அரசாங்கத் திற்குமிடையே ஒரு நடுநிலையாளராகத் தொழிற்பட்டிருந்ததையும் காணமுடிகிறது. இவ்வாறான மாற்றங்களானவை அடிப்படை உரிமைகளை அத்தியாயமானது இலங்கை யாப்பில் உள்வாங்கப்பட்டதன் பின்னரே சாத்தியமானதாகவும், தொடக்கத்தில் அடிப்படை உரிமைகள் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டதுடன் படிப்படியாக நீதிமன் றங்கள் செயற்திறனுள்ளவையாக மாற்றம் பெற்றதுடன் பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அக்கறை செலுத்தின. இந்தவகையில் பிரதான தகவல் தருனர்களால் நீதிமன்ற முறைமைகளும், நீதிபதிகளும் சாத்தியமான விருப்பத்திற்குரிய நீதியை நிலைநாட்டும் பொறிமுறையாகப் பார்க்கப்பட்டனர்.

உண்மையிலேயே நீதிமன்றங்களும் அவற்றுடன் தொடர்புபட்ட அங்கங்களும் உதாரணமாகத் தொழிலாளர் தீர்ப்பாயம் (Labor Tribunal) மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுமே இன்றையநிலையில் அரசு நீதிதவறுகின்றபோது மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களாகச் செயற்படுகின்றன. சட்டப்பின்னணியுள்ள தகவல் தருனர் ஒருவர் "உச்ச நீதிமன்றத்தின் வகிபங்கு என்பது அரசியலமைப்புத் தொடர்பான வியாக்கியானத்தை வழங்குவதும், அதனை உயர்நீதிமன்றம் நடைமுறைப்படுத்துவதற்குரிய வழிகாட்டுதலை வழங்குதலுமாகும்" எனக் குறிப்பிடுகிறார். எனினும், அடிப்படை உரிமைமீறல் வழக்குகளை மாகாண நீதிமன்றங்களுக்கு மாற்றும் தீர்மானத்தை இவர்கள் வரவேற்காததோடுஇ மாகாண நீதிமன்றுகளுக்கு மனித உரிமைகள் தொடர்பாகப் போதிய திசை காட்டல்கள் இல்லாதிருப்பதுடன் இ நீதிபதி களுக்கிடையிலான நெருக்கமான தொடர்புகள் நியாயமான தீர்ப்புக்களில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இவர்கள் கருதுகின்றனர்.

ஏழையாக, பெண்ணாக, சிறுபான்மைச் சமுதாயத்தின் அங்கத்தவராக இருப்பது நீதியானதும் நியாயமானதுமான நடாத்துகைக்கு உட்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துதல்

நீதியை அடைவதற்கான இன்னுமொரு தடையாக நோக்கப்பட்ட விடயம் எளிதில்

பாதிப்புக்குள்ளாகக்கூடிய அல்லது நலிவடைந்த பிரிவினர் தொடர்பாக சட்டமுறைமைகளுக்குள் காணப்படும் முற்கற்பிதமாகும். அதாவது பிரதான தகவல் தருபவர்ஒருவர்இது தொடர்பானகருத்தினைப் பகிரும்போது "வலியவர்களுக்கும், வலிமை குன்றியவர்களுக்கும் சட்ட நடைமுறை வேறு வேறாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. உதாரணமாகச் சட்டத்திற்குப் புறம்பாக கடத்தப்பட்ட நபர்கள் தொடர்பான வழக்குகளைப் பார்க்கும்போது செல்வாக் குள்ளவர்கள், பலமான ஆதரவுள்ளவர்களுக்கு ஒருவிதமாகவும், அவ்வாறில்லாதவர்களுக்கு சிங்களவர்களாக, தமிழர்களாக அல்லது முஸ்லிம்களாக இருப்பினும் அது வேறு விதமாகவும் அமைந்து விடுகிறது" என்கிறார். கடத்தப்பட்டவர்களின் விவகாரம் வட-கிழக்கில் கையாளப்படும் நிலை தெற்கில் கையாளப்படும் நிலையிலிருந்து வேறுபடுகிறது என்ற கருத்தையும் பிரதான தகவல் தருனர்கள் முன்வைத்தனர்.

வழக்குகளில் சாட்சிகள் ஆதாரங்கள் தொடர்பான சட்டச்சிக்கல்கள்

ஆய்வு செய்யப்பட்ட இரு பிரதேசங் களிலும், சாட்சியங்கள் மற்றும் தடயங்கள் பற்றி அதிகம் கருத்துரைத்ததுடன் இவற்றைப் பாதுகாப்பதிலுள்ள நடைமுறைச்-சிக்கல்கள் பற்றியும் தகவல் வழங்கினர். வழக்குகளில் சாட்சியங்கள் மற்றும் தடயங்கள் முதன்மை யானவை என்ற கருத்துடன் அனைவரும் ஒருமித்தாலும்இ சாட்சியங்கள் தொடர்பான தரமற்ற காவல்துறை விசாரணை, சாட்சியமளிக்க நபர்கள் முன்வராமை, சாட்சிகளுக்குரிய பாதுகாப்பை வழங்குவதில் இடர்பாடுகள், வழக்கு நடக்கின்றபோதும், அது முடிவடைந்த பின்னரும் சாட்சிகளுக்கும், தடயங்களுக்கும் ஏற்படும் விளைவு பற்றி அநேக தகவல் தருனர்கள் தமது கவலைகளையும், அக்கறையையும் வெளிப்படுத்தினர். சிலவேளைகளில்பொலிசார்தடயம்எதனையும் பெற்றுக்கொண்டாலும், அவர்கள் உறுதியான முதல் தகவல் அறிக்கை எழுதாதவிடத்து அத் தடயம் பயனற்றுப்போகிறது. எனவே நீதிமன்றில் சாட்சியம் பயனற்றுப்போகிறது. எனவே முதல் தகவல் அறிக்கைகள் திருத்தமானதாகவும், பலமானதாகவும் இல்லாதவிடத்து நீதிமன்றங்களால் எதுவும் செய்ய இயலாமல் போய்விடுவதுடன் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது காவல் துறையேயன்றி நீதிமன்றங்கள் அல்ல எனத் தெரிவித்தனர்.

மேலும் ஒரு தகவல் தருனர் கருத்து ரைக்கும்போது "நாம் உடல்ரீதியாகச் சித்திரவதை புரியப்பட்டாலும் எம்மிடம் ஆதாரம் இல்லாதபோது எமக்கு நீதி கிடைக்க வாய்ப்பில்லை" என்கிறார். பாலியல்ரீதியான வன்முறைகள், சித்திரவதைகளிற்குள்ளானோர் மீண்டுமொருமுறை உளரீதியான வன்முறைக்குட்படுவதை தாம் விரும்பவில் லையென்றும், தமது தனிமனித ஒழுக்கம், தனிப்பட்ட உரிமைகள் என்பன நீதிமன்ற வழக்குகளில் பாதிக்கப்படுவதோடுஇ தாம் உளப் பாதிப்புக்குள்ளானதாகவும் தெரிவித்திருந்ததுடன், இவ்வாறான பாதிப்புக்கள் தாம் சட்ட உதவியை நாடுவதற் குத்தடையாக அமைந்ததாகவும் கூறுகின்றனர்.

மேலும் ஒரு பெண் முதல்நிலைத் தகவல் தருனர் பதிலளிக்கும்போது "பெண்களிற்குப் பாதுகாப்புத்தரவேண்டியது சட்டத்தின் கடமையாகும். இன்று பொலிசாருக்கே பாதுகாப்பில்லாத சூழல் காணப்படுகின்றது. சட்டமென்பது பலமின்றியும், திராணியின் றியும் இருப்பது இன்று தெளிவான விடயமாகும். பலமான, வசதி வாய்ந்தவர்கள் விரும்பினால் சாட்சிகளைப் பயமுறுத்தவோ, அடிபணியவோ வைக்க முடியும் என்கிறார்.

உண்மைகளைப் பொய்யாக மாற்றுதல் மற்றும் சட்டமுறைமைக்குள் இருக்கக்கூடிய சவால்கள்

மேற்கூறிய சவால்களைத் தவிரவும் சட்டமுறைமை பற்றிய சவால்கள், கஸ்ரங்கள் மற்றும் அக்கறைகள் பற்றிப் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதில் வெவ்வேறு வகையான மனித உரிமைகள் தொடர்பான கவலைகள் வெவ்வேறு விதமாக நீதிமன்றங்களால் அணுகப்பட்டதனையும் இங்கு காணக்கூடியதாகவுள்ளது. இதில் வர்க்கம், செல்வச்செழுமை, பாலினம் போன்ற பொருண்மைகளும் பிரதிபலிப்பதனைக் காணலாம். ஒரு பதில்தருனர் குறிப்பிடும்போது "மானநஷ்ட வழக்கொன்றிற்காக ஒருவர் இலட்சக்கணக்கில் நட்டஈடு பெறுகின்றபோது ஊனமுற்று சக்கர நாற்காலியில் வருமொருவர் வெறும் 5000/= ரூபாவையே பெற முடிகிறது. சில வேளைகளில் சிலர் தவறுதலாக இனங்காணப்பட்டு சிறைகளில் சித்திரவதை அனுபவிக்க நேர்ந்தாலும், அதற்கான இழப்பீட்டைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லாது போய்விடும் என்கிறார்" கொழும்பு நீதிமன்றில் விசாரணை செய்யப்படும் மனித உரிமைகள் தொடர்பான வழக்குகள் மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கும் பாதிப்பாக அமைவதுடன், பிரதேச விசேட பிரிவு அல்லது மாகாணமட்டத்தில் நீதிதேட விரும்புவோருக்கு அதை அவ்வாறே பெறக் கூடியதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். வழக்குகளும் இந்த மட்டத்திலேயே நடத்தப்பட வேண்டும்என்றும் கருதுகின்றனர். இங்கு சட்டம் நீதி மற்றும் மக்களிடையே அந்நியமாதல் என்ற விடயமும் முதன்மை பெற்றிருந்தது. எனவேசட்டத்தின்வலிமையால் உண்மை பொய்யாகவும், நீதி அநீதியாகவும், அப்பாவிகள் குற்றமிழைத்தவர்களாகவும் மாற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் எனக் கருதுகின்றனர். எனினும் கிராம மட்டத்தில் இந்நிலமை குறைவாகவே காணப்படுவதுடனஇ கிராமங்களில் நெருக்கம் அதிகம் காணப்படுவதால் அக்கறையும் அதிகம் காணப்படுகின்றது. மேலும் இது நீதியைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கின்றது என்கின்றனர். எனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இரண்டு மாவட்டங்களிலுமுள்ளவர்கள் கிராம அபிவிருத்திச் சங்கம், நல்லிணக்க சபைகள் என்பவற்றை உறுதியாக நிறுவுவதன் மூலம் உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகளுக்கான தீர்வை விரைவாகப் பெறுவதுடன், நீதி முறைமைகளுக்கு மாற்று வழிமுறையாகவும் இவற்றைக் கொள்ளலாம் எனக் கருதுகின்றனர்.

மேலும் சட்டவரைபுகளை உருவாக்க வேண்டியதன் உறுதியான காரணங்களைப் பிரதிபலிக்கும் அக்கறையையும் சில முதற்தர தகவல்கள் தருனர்கள் வெளிப்படுத்தியமையைக் காணமுடிகின்றது. அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்குரிய வகையிலேயே சட்டங்களை வரைகிறார்கள். மேலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதியே சட்டங்களை உருவாக்கி மக்களிடம் கையளிப்பதனால் இச் செயன்முறையில் மக்களின் பங்களிப்பு பெறப்படுவதில்லை. மேலும் மக்களின் உரிமைகளைப்பாதுகாக்கும்சட்டங்கள்காணப்பட்டாலும், பயங்கரவாதத் தடைச்சட்டம் அவற்றைப் பாதித்து மேலெழுந்து நிற்கின்றது என்கின்றனர். எமது நாட்டில் சட்டத்தை மீறுபவர்களே நீதியைத் தீர்மானிப்பது மிகவும் கவலைதரக்கூடிய விடயமாதக இருப்பதுடன், பெரும்பாலும் தீவிரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகள் அரசியல் பழிவாங்கலாகவே அமைந்து விடுகின்றது என்கின்றனர்.

மேலும் சில சட்டங்கள் நடைமுறைப் பிரச்சனைகளிற்குப் போதுமானதல்ல என்ற கருத்தும் அவர்களிடம் காணப்பட்டது. உதாரணமாக சித்திரவதைகளிற்கு எதிரான சட்டத்தைப் பொறுத்தவரை அது நேரடியாக அரச ஆயுதப்படையினர்மீது அழுத்தத்தைப் பிரயோகித்தாலும், துணை ஆயுதக்குழுக்கள் அல்லது தனி ஆயுதக்குழுக்கள் அல்லது நிறுவனம்சாரா வன்முறைக் குழுக்கள்

நிகழ்த்தும் வன்முறைகள், உரிமைமீறல்களைக் கட்டுப்படுத்தப் போதுமானதாக இல்லை என்கின்றனர். பொது ஆர்வச்சட்டம் (Public Interest Law) இலங்கையில் காணப்பட்டாலும், அது மக்களால் சரியான முறையில் விளங்கிக்கொள்ளப்படவில்லை என்கின்றனர். மேலும் குற்றங்களிற்கும் அவற்றிற்கான தண்டனைகளுக்குமான பொருத்தப்பாடின்மைகள் பற்றி அவர்கள் வருத்தம் தெரிவித்ததோடு சட்ட நடைமுறைகளை விமர்சிக்க முடியாமை தொடர்பான அவர்களின் இயலாமையையும் வெளிப்படுத்தியிருந்தனர். தாம் சட்டத்தின் முன்சென்று அதன் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினால் அது தமக்கே சட்டச்சிக்கல்களைத் தோற்றுவிக்கக்கூடும் என்ற அச்சமும் இவர்களிடம் காணப்பட்டது.

இரண்டு பிரதேசத்தவர்களாலும் கருத்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட சில உரிமைகள்

சமமமாக நடத்தப்படுவதற்கான உரிமை மற்றும் சம உரிமைக்கான உரிமைகள் என்கின்ற இரண்டு விடயங்களும் இரண்டு ஆய்வுப்பிரதேசத்து முதல்நிலை தகவல் தருனர்களினதும் பிரதான அக்கறைகளில் ஒன்றாக இருந்துள்ளது. சமூகத்தினுள் நீதி மற்றும் நேர்மைத்தன்மையை நிலைநாட்டுவதில் இவை செல்வாக்குச் செலுத்துவதாக அமைந்துள்ளன. பயணம் மற்றும் அசைவிக்கத்திற்கான உரிமைகளும், இங்கு பிரதான புள்ளியாக இருந்தது. மேலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையிலும் இலங்கையிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் அனுபவிக்கும் உரிமைகள் அனைத்தையும்தாமும் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் காணப்பட்டது. தாம் விரும்பிய இடத்தில் வாழும் உரிமை மற்றும் விரும்பிய விடயத்தைப் பேசும் உரிமை மீறப்படுவது தற்போது சர்வசாதாரணமாகிவிட்டதுடன், இது இரண்டு மாவட்டங்களிலும் பொதுவானதோர் அக்கறையாகக் காணப்பட்டது. தற்போதைய நல்லாட்சியிலும் இவ் உரிமைகள் கேள்விக்குறியாகவே காணப்படுவதாகவும் கருத்துத் தெரிவித்ததுடன், மக்கள் ஆயுதங்களிற்கு மத்தியில் பயத்தில் வாழ்வதால் பேச்சுரிமை நசுக்கப்படுவதற்கு அது அடிப்படையாக உள்ளது என்றும் கருதுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பங்குபற்றுனர்கள் அரச பொறிமுறையினையும் அவற்றின் செயற்பாடுகளின் தரத்தினையும் முன்னுரிமைப்படுத்தினர். இதில் முக்கியமாக சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன்மூலம் நன்மை பெறுவதற்கான உரிமை, அதற்காக பின்பற்றவேண்டிய யாப்பு மற்றும் சமவாயங்கள் என்பவற்றினை இவர்கள் முதன்மைப்படுத்தியதோடு ஊழல் ஒழிக்கப்படுதல் வேண்டுமென்றும் இவையே உரிமைகளின் அடித்தளம் என்ற கருத்தும் இவர்களிடம் பரவலாகக் காணப்பட்டது. இவற்றைவிடவும் ஒம்புட்ஸ்மன் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றின் செயற்திறனான தொழிற்பாடு என்பனவும் நாட்டுமக்களின் உரிமைகளின் அடிநாதமென்ற கருத்தும் காணப்பட்டிருந்தது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான எண்ணக்கருவாக்கங்கள்

மனித உரிமை மீறல்களுக்கான காரணங்கள் அவற்றின் விளைவுகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது பெரும்பாலான முதன்நிலைத் தகவல் தருனர்கள் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்படல், தற்போது நிலவுகின்ற பாதுகாப்பற்ற சூழல்கள், கைது செய்தல் மற்றும்தடுத்து வைத்தல் என்பன தொடர்பான அரச அதிகாரத்தினைப் பயன்படுத்துவதில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றியும் தமது அக்கறையை வெளிக்காட்டினர். இவை பெரும்பாலும் இன மோதல்களுடன் தொடர்புபட்ட பிரச்சினையாகக் கருதப்பட்டபோதும், நுண்மையாகப் பார்க்கின்றபோது ஆட்கடத்தல்கள்,

காணாமற்போதல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், உயிர் அச்சுறுத்தல்கள், கப்பம் பெறுதல், நீண்டகால மற்றும் கட்டாயத் தடுத்து வைப்பும் இங்கு முதன்மையாகக் கலந்துரையாடப்பட்ட விடயங்களாக உள்ளன. அதிலும் குறிப்பாக ஆட்கடத்தல் மற்றும் காணாமற் போதல் என்பன தலையாய சவால்களாக இனங்காணப்பட்டிருந்தது. ஆட்கடத்தல் என்பது தமிழர்கள் மீது தொடங்கி முஸ்லிம்களின் மீது பரவி இப்போது சிங்களவர்களில் முடிவடைந்துள்ளது எனக் கருதினர்.

ஆட்கடத்தல், காணாமற் போதல் என்பன ஒரு புதிய அனுபவமாக இலங்கையர்களிற் கில்லாவிடினும், மறைவான குற்றவியல் நடவடிக்கைகளை இம் மனித உரிமை மீறல்கள் மேலும் கடுமையாக்கும் என்பதனாலும், மாகாண அரசுகளின் பலத்தில் சிதைவையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துமென்பதாலுமே பிரதான தகவல் தருனர்கள் அதிகம் தமது அக்கறையையும், கவலையையும் வெளிக்காட்டியிருந்தனர். 1988, 1989, 1990 ஆகிய வருடப்பகுதிகளில் இவ்வாறான ஆட்கடத்தல்கள், காணாமற் போதல் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் பெருமளவிற்கு சிங்களமக்களிடம் பாதுகாப்பின்மை தொடர்பான உணர்வை ஏற்படுத்தியிருந்ததாகவும், வாழ்வு பற்றிய அவநம்பிக்கை மக்களை ஆட்கொண்டிருந்ததாகவும் பிரதான தகவல் தருனர்கள் குறிப்பிட்டனர்.

மேலும் இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்கு இனத்துவ வடிவம் சேர்க்கின்ற போது அது வேறொரு பரிணாமத்திற்கு இட்டுச் செல்கின்றது என இவர்கள் மேலும் கருதினர். உதாரணமாக இன்று நிலவும் பாதுகாப்பில்லாத, எளிதில் பாதிப்படையும் சூழலில் வெளிப்படையான அரசியல் மூலகமொன்று செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். அதாவது தமிழ் முஸ்லிம் வர்த்தகர்கள் கப்பம் பெறுவதற்காகக் கடத்தப்பட்டபோது சிங்களவர்கள் கடத்தப்படவில்லை என்பதுடன் அரசாங்கத்துடனும், ஆயுதப்படைகளுடனும் தொடர்பிலிருந்தவர்கள் இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய தேவை இருக்கவில்லை எனவும் கூறினர்.

**மனித உரிமை மீறல்களுக்கான விளைவுகள்**

பெரும்பான்மையான தகவல் தருனர்களின் பார்வையில் மனித உரிமை மீறல்களின் விளைவுகள் சமூகரீதியிலும், தனியாளரீதியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. விசேடமாக நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் தண்டனைகளில் இருந்து தப்பக்கூடிய வகையில் மேற்கொள்ளக்கூடிய மனித உரிமை மீறல்கள் பெரும்பாலும் சர்வாதிக்காரத்தையும், எதிர்வினையையும் ஊக்குவிப்பதாக அமையுமெனக் கருதுகின்றனர். இதுபற்றி சட்டத்தரணியான அரசியல்வாதியொருவர் குறிப்பிடும்போது "இது மிகவும் ஆபத்தானதாகும், மக்கள் வீதிக்கு இறங்க இது வழிவகுப்பதுடன் அது கலகத்தையும் ஏற்படுத்தக்கூடியதாகும்" என்கிறார். அவர் மேலும் "இவ்வாறான நிலைமை ஆட்சிக்குக் குந்தகம் ஏற்படுத்துவதுடன் காட்டாட்சியை ஏற்படுத்துவதுடன் இ இறுதியில் அது ஒரு தோல்வியுற்ற அரசாங்கமாக மாறும் தன்மையையும் ஏற்படுத்திவிடும்" என்கிறார்.

முக்கியம் பெற்ற இன்னுமொரு விடயம் தொடர்ச்சியான வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களால் ஏற்படக்கூடிய ஆளிடை உறவுகள் மற்றும் பொதுவான உறவுநிலைச் சிக்கல்களாகும். கொழும்பில் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் போன்று வடக்கு கிழக்கு மாகாணத்திலிருப்பவர்களும் மகிழ்ச்சியாகவும், வசதியாகவும் இருத்தல் வேண்டும். கொழும்பில் இருப்பவர்கள் வருந்துவது போன்ற தோற்றப்பாட்டை எம்மால் காணமுடியவில்லை. அவர்கள்

மகிழ்ச்சியாக வாழ்வதற்கு அவர்கள் செலுத்தும் விலையாகவே இதனைப் பார்க்கின்றனர். இது இவ்வாறே தொடர்ந்தால் எமது நாடு சோமாலியா போன்று உருவா வதற்கும் பட்டினியும், விபச்சாரமும் தலைவிரித்தாடு வதனையும் தவிர்க்க முடியாது போய்விடும் எனத் தெரிவித்தனர்.

சமூகரீதியான விளைவுகள் தவிர தனியாள் மற்றும் அவர் சர்ந்த குடும்ப உறுப்பினர்களின் அவலங்களையும் புறந்தள்ள முடியாது என சில முதல்நிலை தகவல் தருனர்கள் தெரிவித்தனர். தொலைந்து போனவர்களின் உறவினர்களின் முகங்களில் தெரியும் வருத்தமும், ஆதங்கமும் ஒரு தனியாள் சார்ந்த பிரச்சினையாக இருப்பதுடன், இது பெரியதோர் உரிமை மீறலாகவும் காணப் படுகின்றது. முதிய பெற்றோர்கள், பெண்கள், பிள்ளைகள் கதறுகின்றனர். தமது பிள்ளைகள், கணவன்மார், தகப்பன்மார், மகள்மார், தலையாய உழைப்பாளிகளை மீண்டும் தம்மிடம் திரும்பத்தரச்சொல்லி கதறுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒருவர் கூறும்போது "பயமின்றி ஒருவரும் நடமாட முடியாது. மக்கள் பயத்துடன் வாழ்கின்றனர். மேலும் ஒரு வைத்தியர் "பாலியல் துன்புறுத் தலுக்குள்ளாகும் பெண்களின் நிலமை மிகவும் மோசமாகிவிடுவதுடன், சிறு பிள்ளைகளின் ஆளுமையும் பெரும் பாதிப்படைந்து விடுகின்றது" என்கிறார். இளைஞர் மது பாவனையில் ஈடுபடுவது, பெண்கள் சமூக எதிர் நடத்தைகளில் ஈடுபடுவது என இரு பிரச்சினைகள் இன்னும் மோசமடையும் நிலை ஏற்படுகின்றது. இது இளைஞர் மத்தியில் பெரும் சவாலை ஏற்படுத்துவதுடன் இ தனியாள் ரீதியான சாதனைகள் மற்றும் இளைஞர்களின் சமூகரீதியான பங்களிப்பு என்பனவும் பெரிதும் பாதிப்படையும் நிலை தோன்றுகின்றது. இது மனித உரிமை மீறல்களின் மிக மோசமான நிலையாகும் எனத்தெரிவித்தனர்.

**முடிவுரை**

மனித உரிமை மீறல்களானவை மனித உரிமை மூலதத்துவங்களுக்கு எதிரான தாக்குதல்களாகவும், சமூகத்தில் ஏற்படும் அமைதியின்மை மற்றும் வன்முறைகளிற்குக் காரணமாகவும் அமைகின்றன. மனித கௌரவத்திற்கான இழுக்காக மனித உரிமை மீறல்கள் காணப்படுவதுடன் அவை மிகவும் பயனுறுதி வாய்ந்தமுறையில் கையாளப்படல் வேண்டும். இதற்காக உறுதியான சட்டங்கள் இயற்றப்படுவதோடு மட்டுமன்றி அவை கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தற்போதுநடைமுறையிலுள்ளமனித உரிமை மீறல்களை உள்ளூர் மற்றும் சர்வதேச நியமங்களிற்கேற்றபடியும், அரசியலமைப்புச் சாசனத்தில் குறித்துரைத்ததன் படியும் பாதுகாத்து செழுமைப்படுத்த வேண்டியது அனைவர்க்குமான கடமையென்பதும் இவ்வாய்வில் வெளிக்கொணரப்பட்ட ஒருமித்த சிந்தனையாகக் காணப்பட்டிருந்தது.

**உசாத்துணைப்பட்டியல்**


1. Asian Legal Resources Centre [ALRC] (2004). An Exceptional Collapse of the Rule of Law: Told through stories by families of the disappeared in Sri Lanka. retrieved from http://www.alrc.net/mainfile.php/60written
2. Human Rights Watch. [HRC], (2007). Sri Lanka: Government Abuses Intensify:

Killings, abductions and displacement soar as impunity reigns. Retrived from https://www.hrw.org/news/2007/08/06/Sri-lanka-government-abuses-intensify

3. ICG, (2015). Sri Lanka's Presidential Election: Risks and opportunities . Retrived from https://www.crisisgroup.org/.../Sri-lanka/sri-lanka-s-presidential-election-risks-and-opp...
4. International Crisis Group [ICG]. (2010). War Crimes in Sri Lanka -. Retrieved from https://www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/war-crimes-Sri-lanka
5. Press Emblem Campaign [PEC], (2007). Monitoring System: the PEC Ticking Clock. Retrieved from. www.thebottomline.lk/2007/12/19/B38.html
6. Refugee Review Tribunal , 2010. Country Advice Sri Lanka, LKA- 37657- Karuna group Australian Government. Retrived from www.mrt-rrt.gov.au/ArticleDocuments/105/lka37657.pdf.aspx
7. Ruwanpura, K. N. (2006). Matrilineal communities, patriarchal realities: a feminist Nirvana uncovered. University of Michigan Press. www.ukba.homeoffice.gov.uk/sitecontent/documents/.../ognsrilankaogn?
8. Thangavelu, J. (2005) Equal access to justice: Where should it begin to ensure human rights? The Sunday Times Plus, Sunday August 7, 2009, Legal Section, p.13
9. UNHCR ,. (2009). Global Report. Sri Lanka. Retrieved from www.unhcr.org/publications/fundraising/.../unhcr-global-report-2009-sri-lanka.html
10. UNHCR ,. (2008)Global Report - Sri Lanka. Retrieved from
11. www.unhcr.org/publications/fundraising/.../unhcr-global-report-2008-sri-lanka.html
12. United Kindom Border Agency [UKBA]. (2011). Opreational Guidance Note Sri Lanka Sri Lanka OGN v 11.0 Issued March 2011. Retrieved from: http:// www.refword.org/publisher, UK HO LKA, 4ee9c4332, o.htm